**செய்தி வெளியீடு எண்: 619** **நாள்: 04.09.2018**

## <u>செய்தி வெளியீடு</u>

## <u>தமிழ்நாட்டில் குறைந்தபட்ச ஆதார விலையில் பச்சைப்பயறு கொள்முதல் செய்தல்</u>

விவசாயிகளின் விளைபொருளுக்கு உரிய விலை கிடைத்திடவும், அவர்களின் வருவாயைப் பெருக்கிடவும் மாண்புமிகு அம்மாவின் அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, மத்திய அரசின் விலை ஆதாரத் திட்டத்தின் கீழ் கடந்த 2017–18ஆம் நிதியாண்டின் ராபி பருவத்தில் 3,000 மெட்ரிக் டன் உளுந்தை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்திட தமிழ்நாடு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, சுமார் 1,550 மெட்ரிக் டன் உளுந்து கொள்முதல் செய்யப்பட்டது. கடந்த ஆண்டு உளுந்தின் சந்தை விலை கிலோ ஒன்றுக்கு ரூ.47/– என்ற அளவில் இருந்த நிலையில், தமிழ்நாடு அரசின் நடவடிக்கையின் பேரில் ரூ.54/– என்ற விலைக்கு நாஃபெட் நிறுவனம் கொள்முதல் செய்து விவசாயிகளின் வருமானம் உயர வழிவகை செய்தது.

இந்த ஆண்டும், நடப்பு காரீப் பருவத்தில், பச்சைப் பயறு சாகுபடி செய்த விவசாயிகள் பயன்பெறும் வகையில் அவர்கள் விளைவித்த பச்சைப் பயறை மத்திய அரசின் “நாஃபெட் நிறுவனம்” (National Cooperative Marketing Federation) மூலம் கொள்முதல் செய்திட மத்திய அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டு, 4,625 மெட்ரிக் டன் கொள்முதல் செய்திட அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்பொழுது பச்சைப் பயறின் சந்தை விலை கிலோ ஒன்றுக்கு ரூ.50/– முதல் ரூ.55/– ஆக உள்ள நிலையில், தமிழ்நாடு அரசு

பச்சைப் பயறின் நியாயமான சராசரி தரத்திற்கு ரூ.69.75 என்ற விலைக்கு நாஃபெட் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

பச்சைப் பயிறை கொள்முதல் செய்திட மாவட்டங்களில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் முதன்மை கொள்முதல் முகமையாக செயல்படும். இவற்றுடன் மாவட்டங்களில் கண்டறியப்பட்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலமும் பச்சைப்பயறு கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்பும் விவசாயிகள் நிலச் சிட்டா, அடங்கல், ஆதார் அட்டை மற்றும் வங்கி கணக்கு விவரங்களுடன் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் அல்லது உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும். இக்கொள்முதல் நடப்பாண்டு **செப்டம்பர் மற்றும் அக்டோபர்** மாதங்களில் மட்டுமே நடைபெறும். விளை பொருளுக்குரிய தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வரவு வைக்கப்படும். விவசாயிகளின் விளைபொருளுக்கு நல்ல விலை கிடைக்க தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள இம்முயற்சியில் விவசாயிகள் முழுமையாக பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**